**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**

**SESSION CASE NO.110/2023**

2025 ஆம் ஆண்டு ஜீலை மாதம் 03 ஆம் நாள் வியாழன் கிழமை

அ.சா.7 (பட்டியல் சாட்சி–8) இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திருமதி. மகாலெட்சுமி, Gr.II Bench Clerk அவர்களால் சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | ரஜினிகாந்த் | த/பெ.: | தங்கராசு |
| கிராமம்: | நெடும்பலம் | தாலுக்கா: | திருத்துறைப்பூண்டி |
| மதம்: | இந்து | தொழில்: | விவசாயம் |
| வயது: | 40 | முகவரி: | நெடும்பலம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 03.07.2025

**முதல் விசாரணை :–**

நான் தற்போது மேற்கண்ட விலாசத்தில் குடியிருந்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். எனக்கு ஆஜர் எதிரிகளை தெரியாது. அ.சா.1–ஐ தெரியாது. அ.சா.6 சிவராமன் என்பவரை தெரியும். இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. இவ்வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் கையெழுத்து கேட்டார்கள். காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து போட்டேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவதாக போடப்பட்ட கையெழுத்து மட்டும் என்னுடையது தான். நான் வேறு ஒரு வழக்கிற்காக எனது மகனை அழைத்து வர வேண்டி திருத்துறைப்பூண்டி காவல் நிலையத்திற்கு சென்றேன். ஆய்வாளர் என்னிடம் கையெழுத்து போட சொன்னார்கள். நானும், சிவராமன் என்பவரும் காவல் நிலையத்தில் கையெழுத்து போட்டோம். பார்வை மகசரில் உள்ள இரண்டாவதாக போடப்பட்ட கையெழுத்து மட்டும் என்னுடையது தான். எனது மகனுக்காக எழுதப்படாமல் இருந்த வெள்ளைத் தாளில் கையெழுத்து போட்டேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் இரண்டாவதாக போடப்பட்ட கையெழுத்து என்னுடையது தான். அந்த கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.3** ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>சாட்சி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியமளிக்காததால் அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி பிறழ் சாட்சியாக பாவிக்க அனுமதி கோரி அனுமதியுடன் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

நான் கடந்த 27.10.2022–ம் தேதி கலைக்காடு கிராமத்திற்கு விவசாய வேலைக்காக சென்றபோது எதிரிகள் அனைவரும் அ.சா.1 மாதவராமன் என்பவரை எதிரிகளின் வீட்டை உன்னால் தான் இடித்து விட்டார்கள் என கூறி பைக்கில் வந்த மாதவராமனை வழிமறித்து அடித்து செல்போனை உடைத்து அவரை தரதரவென தரையில் போட்டு இழுத்து அடித்த விவரம் தெரியும் என்றும், மேற்படி சம்பவம் தொடர்பாக திருத்துறைப்பூண்டி காவல் துறையினர் 28.10.2022–ம் தேதி காலை 09.10 மணியளவில் மீண்டும் நான் வழக்கம் போல வேலைக்கு சென்றபோது போலீசார் சம்பவ இடத்தில் விசாரணை செய்து வரைபடம் தயார் செய்தார்கள் என்றும், அவ்வாறு விசாரணை செய்து வரைபடம் தயார் செய்த விவரம் எனக்கும், என்னுடன் வந்த சிவராமன் என்பவருக்கும் தெரியும் என கூறி காவல் துறையினர் தயார் செய்த பார்வை மகசரில் நானும், சிவராமனும் கையொப்பம் செய்தோம் என கூறிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை:– இல்லை.</u>**

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.